Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 199/2025** |
| Deposition of witness for | :: | **PW. 7** |
| Name | :: | **கணேசன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1 , 2 எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**03.06.2026**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போதும் பந்தல்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.02.2025 ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் பந்தல்குடி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாழ்வாங்கி சிவந்திநாதபுரத்தை சேர்ந்த கருப்பசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 34/2025 சட்ட பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் நகலினை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ தினத்திலிருந்து 4 நாட்கள் காலதாமதத்துடன் முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதற்காக

காலதாமதம் ஆனது என்பது பற்றி முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண். 8 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்றும், புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யார் எந்த தகாத வார்த்தையை பயன்படுத்தினார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சொன்ன முறையில் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனுவானது பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 199/2025** |
| Deposition of witness for | :: | **PW. 6** |
| Name | :: | **அருணாசலம் (மருத்துவர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the
day of 2026

---

**1 , 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**03.06.2026**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.02.2025 ம் தேதியன்று அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் நான் 24 மணி நேர பணியில் இருந்தபோது மாலை 07.20 மணியளவில் வாழ்வாங்கி கிராமத்தை சேர்ந்த சந்திரன் என்பவரது மகன் கருப்பசாமி வயது 35 என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கையால் அடித்ததாக கூறி சிகிச்சைக்கு வந்தார். இந்த சம்பவம் 06.02.2025 ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் அவரது வீட்டின் அருகே வைத்து நடந்ததாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். மேலும் அவருக்கு வலது பக்க கழுத்தில் மற்றும் கன்னத்தில் சிறிய சிராய்ப்பு காயம் காணப்பட்டது. மேலும் கழுத்தில் வலி இருப்பதாக கூறியதால் அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து**

**பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கழுத்தில் வலி இருந்ததாக என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் போலியாக கூட சொல்ல இயலும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய சிராய்ப்பு காயங்களானது தவறி கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை**